# Chapter 1
# உள்ளங்கையில் ஓர் உலகம்

---

## பக்கம் 1:

## பாடலின் கருத்து :

கணினி என்பது நமது உள்ளங்கையில் உலகைக் காட்டும் ஒரு அற்புதமான படைப்பாகும். நாம் கேட்கும் தகவல்களைக் கணினி ஒரு நொடியில் நமக்குத் தருகிறது. மட்டிலா மகிழ்ச்சியை மனதிற்குள் கொண்டு வருகிறது.

கணினியின் இணையம் மக்கள் அனைவரையும் இணைக்கக் கூடிய ஓர் அற்புத அமைப்பாகும். விரைவாகக் கடிதம் அனுப்ப, குறுஞ் செய்திகளை அனுப்ப இது நமக்கு உதவுகிறது.

கணினி தகவல் களஞ்சியம் என அழைக்கப்படுகிறது. எந்த விதமான தகவல் வேண்டுமென்றாலும் நாம் இதன் வழியே எளிதில் பெற முடியும். உலகத்தைச் சுருக்கி, உள்ளங்கையில் கொண்டு வரும் கணினி ஓர் உன்னதமான படைப்பன்றோ?

எவ்வளவு நேரம் வேலை செய்தாலும் சரி. கணினிக்குக் களைப்போ சோர்வோ ஏற்படுவதில்லை. எந்தச் செய்தியைத் தேடினாலும் அது எளிதாய் நமக்கு எடுத்து வழங்கும்.

கணினியை உள்ளங்கையில் ஓர் உலகம்' என்றும் உள்ளதைக் காட்டும் கண்ணாடி' என்றும் மக்கள் போற்றுவர். இது அறிவியல் படைப்பின் ஓர் அற்புதம் அன்றோ ?

## பக்கம் 2:

## படிப்போம்! சிந்திப்போம்!

எழுதுவோம்! சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

**கேள்வி** 1.
ஏற்றம் என்ற சொல்லின் பொருள் _________
(அ) சோர்வு

(ஆ) தாழ்வு
(இ) உயர்வு
(ஈ) இறக்கம்
**விடை:**
இ) உயர்வு

**கேள்வி** 2.
என்று + இல்லை – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது __________
(அ) என்றில்லை
(ஆ) என்றும் இல்லை
(இ) என்று இல்லை
(ஈ) என்றல்லை
**விடை:**
(அ) என்றில்லை

**கேள்வி** 3.
முன்னே என்ற சொல்லின் எதிர்ச்சொல் __________
(அ) எதிரே
(ஆ) பின்னே
(இ) உயரே
(ஈ) கீழே
**விடை:**
(ஆ) பின்னே

**கேள்வி** 4.
கணினி ________ வழியே அனைவரையும் இணைக்கிறது.
(அ) தகவல் களஞ்சியம்
(ஆ) செய்தி
(இ) கடிதம்
(ஈ) இணையம்
**விடை:**
(ஈ) இணையம்

## வினாக்களுக்கு விடையளிக்க:

**கேள்வி** 1.
தகவல்களை எதன் வழியே எளிமையாகப் பெறமுடியும்?
**விடை:**
இணையத்தோடு இணைந்த கணினியின் வழியே தகவல்களை எளிதாகப் பெற முடியும்.

**கேள்வி** 2.
கணினியின் பயன்கள் குறித்து இப்பாடலின் வழியே நீ அறிந்து கொண்டவற்றைக் கூறுக. (பார்க்க – பாடலின் கருத்து)
ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுவோமா?

| காட்டிடுவேன் | தந்திடுவேன் |
|---|---|
| ___________ | ___________ |
| ___________ | ___________ |

**விடை:**

| காட்டிடுவேன் | தந்திடுவேன் |
|---|---|
| சொல்லிடுவேன் | செய்திடுவேன் |
| எனக்கில்லை | என்றில்லை |

**கேள்வி** 3.
விசைப்பலகையிலுள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களைக் கண்டறிவோமா?

| | | | | |
|---|---|---|---|---|
| இ | க | வ | ம் | த |
| உ | தி | ணை | ய | ணி |
| னி | ல | ல் | டி | ரை |

| | |
|---|---|
| திரை | |
| | |
| | |

**விடை:**

| | | | | |
|---|---|---|---|---|
| இ | க | வ | ம் | த |
| உ | தி | ணை | ய | ணி |
| னி | ல | ல் | டி | ரை |

| | |
|---|---|
| திரை | இணையம் |
| தகவல் | கணினி |
| உலகம் | வடிவம் |

## சொல் விளையாட்டு:

அலைபேசியோடு தொடர்பில்லாத எழுத்துகளை நீக்கிச் சொற்களை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| ~~நி~~ | ~~ன~~ | தி | ~~மி~~ | ரை |

திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒ | பு | ள | ல | பு | ம் |
| ஆ | அ | ள | ழ | ய் | கா |
| ஈ | னை | ணை | ய | இ | ம் |
| னு | கா | க | மு | ல் | நூ |
| கை | மை | நு | து | பு | வி |

**விடை:**

| | | | | |
|---|---|---|---|---|
| ~~நி~~ | ~~ன~~ | தி | ~~மி~~ | ரை |

திரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ~~ஒ~~ | பு | ~~ள~~ | ல | ~~பு~~ | ம் |
| ~~ஆ~~ | அ | ~~ள~~ | ழ | ய் | கா |
| ~~ஈ~~ | னை | ணை | ய | இ | ம் |
| ~~னு~~ | ~~கா~~ | க | மு | ல் | நூ |
| ~~கை~~ | மை | ~~நு~~ | து | பு | ~~வி~~ |

புலம்

அழகாய்


இணையம்

முகநூல்


புதுமை

## பக்கம் 5:

பின்வரும் செயலிகளுக்குப் பொருத்தமான படத்தினைப் பொருத்துக.




**விடை:**




## பக்கம் 6:

## சிந்திக்கலாமா?

**கேள்வி** 1.
இன்று வாணியின் பிறந்த நாள். வாணியின் மாமா வெளியூரில் வசிக்கிறார். பிறந்தநாளுக்கு அவர் வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவளுடைய மாமா எப்படி வாழ்த்துகள் தெரிவிப்பார்?
சிந்திக்கலாமா?
மின்னஞ்சல் மூலம் அவர் வாணிக்கு வாழ்த்து தெரிவிப்பார்.